# 24-11-2023 செய்தி

## உங்களைத்தேடி, உங்கள் ஊரில் திட்டம் டிசம்பரில் தொடங்கப்படும்

- உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒருநாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்வர். இந்தத் திட்டம், களத்தில் முதல்வர் திட்டத்தின் அடுத்த கட்டமாகும்.

## அதிகரிக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு

**பொருளாதார பார்வை**

- 2023 இல் அமெரிக்காவின் மொத்த உற்பத்தி 26 டிரில்லியன் டாலர், சீனா 19 டிரில்லியன் டாலர், ஜெர்மன் 4.4 டிரில்லியன் டாலர், ஜப்பான் 4.2 டிரில்லியன் டாலர். இந்தியாவில் மொத்த உற்பத்தி 3.7 டிரில்லியன் டாலர்.

- பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் இரண்டு நாடுகளையும் பின்னுக்குத் தள்ளி ஐந்தாவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறோம்.

- இந்தியாவின் தனிநபர் வருமானம் 2,600 டாலர். மற்ற நாடுகளுடன் இதை ஒப்பிடும் போது நாம் 139 – ஆவது இடத்தில் இருக்கிறோம்.

**ஏற்றத்தாழ்வு**

- நம்முடைய மொத்த மக்கள் தொகை 140 கோடி. இதில் மேல் தளத்தில் உள்ள 10 சதவீதம் பேர் இந்த நாட்டில் 80% சொத்துகளை வைத்திருக்கிறார்கள். கடைநிலையில் உள்ள 50% மக்கள் ஆறு சதவீதம் சொத்துகளைத்தான் வைத்திருக்கிறார்கள்.

- ஜிஎஸ்டி வரி வருவாயில் மேல்தளத்தில் உள்ளவர்கள் பங்களிப்பு வெறும் 4% மட்டுமே.